## சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு. செ. ஞானசேகரன், பி.இ.
சிறப்பு தலைமைப் பொறியாளர்,(கூ/பொ) பொ.ப.து.,

செயல்முறை ஆணை எண். ப2/2381/2020 நாள் : 12.10.2021.

பொருள் : நியமனம் (நேரடி) – த.நா.அ.ப.தொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018–2019 மற்றும் 2019–2020–ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV–ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட திரு.இர.வெங்கடேஷ்வரன், இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவங்குதல் – ஆணை வழங்குதல் – குறித்து.

பார்வை : 1. முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து., தலைமைப்பொறியாளர், (பொது) சென்னை மண்டலம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்.3(3)/35935/2020/நாள்: 17.09.2020.

2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். ப2/2381/2020–1/ நாள்: 22.09.2020.

*****

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நடத்தப்பட்ட 2018–2019 மற்றும் 2019–2020–ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV–ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை (1)–ல் காணும் செயல்முறை ஆணையின்படி, இவ்வட்டத்திற்கு பணியமர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் திரு.இர.வெங்கடேஷ்வரன், (பிறந்த தேதி 27.11.1991) இளநிலை உதவியாளரின் தற்காலிக பணிகள் தமிழ்நாடு மாநில அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ல் விதி 28(1)–ன் படி இவர் பணிமேற்கொண்ட நாளான 23.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

2. இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நிலுவையாக உள்ள வழக்குகளின் தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

3. இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் துவக்கி மூன்றாண்டுகால தொடர்பணியில் ஈராண்டு கால தகுதிகாண்பருவத்தில் இருப்பார் எனவும் அறிவிக்கப்படுகிறது. மேலும், இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தபெறும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து.,சார்பில்,
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,
திருநெல்வேலி

22/10/2021

பெறுநர்
திரு.இர.வெங்கடேஷ்வரன்,
இளநிலை உதவியாளர்,
கட்டட (க&ப) வட்டம்
திருநெல்வேலி.